## பாரதிதாசன் பல்கலை.யில்

# எம்.எட். படிப்பில் சேர ஜூலை 31 வரை காலக்கெடு நீட்டிப்பு

திருச்சி, ஜூலை 13: திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் எம். எட். படிப்பில் சேருவதற்கான தேதி ஜூலை 31-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெ.மா. முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக கல்வி நுட்பவியல் துறை சார்பில் நடத்தப்படும் முதுநிலை ஆசிரியர் கல்வி பட்டப்படிப்பில் (எம். எட்) சேர ஜூலை 15-ம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தின் இளநிலை ஆசிரியர் கல்விப் பட்டப்படிப்பின் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அம்மாணவர்களும் எம்.எட். படிப்பில் சேரும் வகையில் சேர்க்கைக்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு 0431-2331743 அல்லது 9443085415 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.